..

<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி-அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புதல்-16.4.2010 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு- ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>பள்ளிக்கல்வித்(டி1)துறை</u>

அரசாணை(நிலை) எண்.203 நாள் 23.07.2010.
திருவள்ளுவராண்டு 2041, ஆடி-7

படிக்கப்பட்டவை:

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.87216/டி1/இ4/ நாள் 4.12.2009.
2. 16.4.2010 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.

------

<u>ஆணை:</u>

16.4.2010 அன்று நடைபெற்ற பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது அரசு நிதியுதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள 952 ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2. அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ளதாக முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநரால் தெரிவிக்கப்பட்ட 952 ஆசிரியரல்லாத பணியிடங்களில், காவலர் (Watchman), தோட்டக்காரர் மற்றும் பெருக்குபவர் (Gardener cum Sweeper), தண்ணீர் கொணர்பவர் (waterman), தோட்டக்காரர் (Gardener) பெருக்குபவர் (sweeper), துப்புரவாளர் (scavenger), தண்ணீர் கொணர்பவர் மற்றும் பெருக்குபவர் (Waterman cum Sweeper), துப்புரவாளர் மற்றும் தோட்டக்காரர் (Scavanger cum Gardener) பெருக்குபவர் மற்றும் துப்புரவாளர் (Sweeper cum Scanvanger) தண்ணீர் கொணர்பவர் மற்றும் தோட்டக்காரர் (Waterman cum Gardener), மற்றும் காவலர் மற்றும் பெருக்குபவர் (Watchman cum Sweeper) ஆகிய, இணைப்பு-I-ல் பட்டியலிடப்பட்டுள்ள 467 பணியிடங்களை வெளியாட்களைக் கொண்டு (Out Sourcing) தொடர்ந்து நிரப்பிக்கொள்ள அனுமதி வழங்கலாம் என்றும், மீதமுள்ள இணைப்பு-II-ல் பட்டியலிடப்பட்டுள்ள 485 பணியிடங்களுக்கு அவை நிரப்பப்பட்ட நாள் முதல் முழுநேர ஊதிய விகிதத்தில் அரசு மானியத்துடன் அனுமதி வழங்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே அரசு ஆணையி□டுகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.39197/நிதி (கல்வி-II)/2010 நாள் 15.7.2010ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ம.குற்றாலிங்கம்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6
**நகல்**
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
பள்ளிக்கல்வி(வரவு-செலவு)துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு-I

(அரசாணை(நிலை)எண். 203, பள்ளிக் கல்வி(டி1)துறை, நாள் 23.7.2010)

| வ. எண். | பணியிடத்தின் வகை | காலிப்பணி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காவலர் | 235 |
| 2 | தோட்டக்காரர் மற்றும் பெருக்குபவர் | 25 |
| 3 | தண்ணீர் கொணர்பவர் | 64 |
| 4 | தோட்டக்காரர் | 26 |
| 5 | பெருக்குபவர் | 60 |
| 6 | துப்புரவாளர் | 38 |
| 7 | தண்ணீர் கொணர்பவர் மற்றும் பெருக்குபவர் | 7 |
| 8 | துப்புரவாளர் மற்றும் தோட்டக்காரர் | 3 |
| 9 | பெருக்குபவர் மற்றும் துப்புரவாளர் | 5 |
| 10 | தண்ணீர் கொணர்பவர் மற்றும் தோட்டக்காரர் | 3 |
| 11 | காவலர் மற்றும் பெருக்குபவர் | 1 |
| | **மொத்தம்** | **467** |

ம.குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு-II

(அரசாணை(நிலை)எண். 203, பள்ளிக்கல்வி(டி1)துறை, நாள் 23.7.2010)

| வ. எண். | பணியிடத்தின் வகை | காலிப்பணி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 14 |
| 2 | நூலகர் நிலை-I | 30 |
| 3 | ஆய்வக உதவியாளர் | 103 |
| 4 | நூலக உதவியாளர் | 6 |
| 5 | பதிவுரு எழுத்தர் | 248 |
| 6 | அலுவலக உதவியாளர் | 58 |
| 7 | ஆய்வக உடனாளர் | 4 |
| 8 | நூலக உடனாளர் | 22 |
| | மொத்தம் | **485** |

ம.குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.